www.Padasalai.Net www.TrbTnpsc.com

Dr. G. THIRUMOORTHI, Idappadi, Salem - 637101, P. Karthi 8610560810

# 11-Std மாதத் தேர்வு ஜுன் – 2025

காலம் : 1.30 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள் : 50

பகுதி – அ

I கொடுக்கப்பட்டுள்ள விடைகளுள் ஏற்புடைய விடையைக் குறியீட்டுடன் எழுதுக.

1. பொருத்தமானதை தேர்ந்தெடுக்க. 10 X 1 = 10

அ) மல்லார்மே – யுகத்தின் பாடல்
ஆ) இன்குலாப் – ஒவ்வொரு புல்லையும்
இ) ஸ்டெஃபான் மல்லார்மே – புல்லின் இதழ்கள்
ஈ) இந்திரன் – பேச்சு மொழியும் கவிதை மொழியும்

அ) அ,ஆ ஆ) ஆ,ஈ இ) ஆ,ஈ ஈ) அ,இ

2. கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள் – அடிமோனையைத் தெரிவு செய்க.

அ) கபாடபுரங்களை - காவுகொண்ட
ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால்
ஈ) காலத்தால் - சாகாத

3. தவறான இணையைத் தேர்வு செய்க.

அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
இ) கடல் + அலை - உயிர் + மெய்
ஈ) மண் + வளம் - மெய் + மெய்

4. "மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது" எனக் கூறியவர் அ) வால்ட் விட்மன் ஆ) எர்னஸ்ட் காசிரர் இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) பாப்லோ நெரூடா

5. தேவாரத்தில் உள்ள பண்களின் எண்ணிக்கை?
அ) 22 ஆ) 103 இ) 23 ஈ) 25

6. திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது. – இவ்வரிகள் உணர்த்தும் கருத்து
அ) மொழி என்பது திட திரவ நிலையில் இருக்கும்
ஆ) பேச்சுமொழி எழுத்து மொழியை திட,திரவ பொருளாக உருவகப்படுத்தவில்லை இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது
ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது

7. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

8. இசைஞானி இளையராஜா எழுதிய இசை நூல்?
அ) எப்படிப் பெயரிடுவேன் ஆ) காற்றைத் தவிர ஏதுமில்லை
இ) இந்தியா 24 மணி நேரம் ஈ) பால்நிலாப் பாதை

9. திரையிசையில், சூஃபி இசையை அறிமுகம் செய்தவர்?
அ) இளையராஜா ஆ) ஹரிபிரசாத் இ) ராசையா ஈ) ஏ.ஆர். ரகுமான்



ACE Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

10. "கூவும் குயிலும் கரையும் காகமும்" - யாருடைய வரிகள்?
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) இன்குலாப் ஈ) சு. வில்வரத்தினம்

பகுதி - ஆ

II எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க. 3 X 2 = 6

11. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?

12. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

13. "நீளும் கைகளில் தோழமை தொடரும்
நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" - தொடை நயங்களை எடுத்தெழுதுக.

14. மொழி குறித்து எர்னஸ்ட் காசிரர் கருத்து யாது?

III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 X 2 = 10

15. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.
அ) வருடம் - ஆ) சொந்தம்

16. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

17. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
அ) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்.
ஆ) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.

18. கலைச்சொல் தருக. அ) Aesthetics ஆ) Migration.

19. உயிர்முதல், மெய்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

20. தமிழாக்கம் தருக. அ) The pen is mightier than the sword.
ஆ) Knowledge rules the world.

பகுதி - இ

IV எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க. 3 X 4 = 12

21. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

22. கவிதை ஒரு படைப்புச் செயல்பாடு என்பதை விளக்குக.

23. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" - எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

24. மொழிக்கு முதல் மற்றும் இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

25. வேர்ச்சொற்களை தொடர்களாக மாற்றுக. *(வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர்)* அ) வா ஆ) பேசு

பகுதி - ஈ

V ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி. 1 X 6 = 6

26. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.
*(அல்லது)* சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக.

27. மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6
அ) ஏடு தொடங்கி ......... எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.
ஆ) தீயினால் சுட்டபுண் ............. ஆறாதே
நாவினால் சுட்ட ....................



ACE Scanner

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com